பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 07 வெள்ளிக்கிழமை (20-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 114

# கொழும்பில் புலிகள் அதிரடிக்குத் தயாராம்

## கண்காணிப்பு, பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, மார்ச் 20

கொழும்புப் பகுதிக்குள் விடுதலைப் புலிகளின் அதிரடிப் பிரிவு ஒன்று நுழைந்து விட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் பொதுமக்களை நேற்று மீண்டும் எச்சரித்தன.

அத்தோடு கொழும்புப் பகுதியில் கண்காணிப்பும், பாதுகாப்பும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அதே வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் அதிரடிப் பிரிவு ஒன்று கொழும்புப் பகுதிக்குள் நுழைந்திருப்பதாகவும், பொதுமக்களை வெகு அவதானமாகவும், கண்காணிப்பாகவும் நடந்துகொள்ளுமாறும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் நேற்று எச்சரித்தன.

தற்கொலைப் படையினரான புலிகளின் அதிரடிப் படையினர் கொழும்புப் பகுதிக்குள் நுழைந்திருப்பதால் பொலீஸாரும் மற்றும் பாது

[8 ஆம் பக்கம் பார்க்க]

# புலிகளின் தற்கொலைப் படை தமிழகத்தில் ஊடுருவி விட்டது

## ஜெயலலிதா சட்டசபையில் நேற்று தகவல்

சென்னை, மார்ச் 20

தமிழகத்தினுள் விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படை ஒன்று ஊடுருவியிருப்பதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று தமிழ்நாடு சட்ட சபையில் அறிவித்தார்.

ராஜீவ் காந்தி படுகொலையில் ஈடுபட்ட குற்றவாளிகளை முடிந்தால் மீட்பதும், இயலாவிடில் அவர்களைத் தீர்த்துக் கட்டுவதும், ராஜீவ் கொலை பற்றிய விசாரணையை நடத்தி வரும் சிறப்பு புலனாய்வுப் பொலீஸின் தலைமைநிலையகட்டடமான 'மல்லிகை'யைத் தகர்ப்பதும் அதோடு தம்மை [ஜெயலலிதாவை] கொலை செய்யவும் இந்தத் தற்கொலைப் படை திட்டமிட்டுள்ளது என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா கூறினார்.

பொலீஸ் திணைக்களம் பற்றிய விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

இப்படிஒருதற்கொலைபடை

[8 ஆம் பக்கம் பார்க்க]

# உயர்தர விசேட பரீட்சை ஏப்ரல் 1 முதல் நடைபெறும்

## பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஜி. சீ. ஈ. உயர்தர [விசேட] பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நடத்தப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல நேற்று அறிவித்ததாக இலங்கை வானொலி தெரிவித்தது.

சுமார் 10 ஆயிரம் மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஆகஸ்டில் நடத்தப்பட்ட ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு குறிப்பிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் தோற்ற முடியாமற் போனதைத் தொடர்ந்தே இவ் விசேட பரீட்சை நடத்தப்படுகின்றது

அந்தந்த மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஊடாக அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

வடக்கில் உயர்தர [விசேட] பரீட்சையை நடத்துவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் இம்மாதம் பத்தாம் திகதி அனுமதி அளித்திருந்ததும்—

பின்னர் பரீட்சை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடுகளை மறு அறிவித்தல்

[8 ஆம் பக்கம் பார்க்க]

# மணலாறு பகுதியில் சண்டை நீடிக்கிறது

கொழும்பு, மார்ச் 20

மணலாறுப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினருக்கும், புலிகள் போராளிகளுக்கும் இடையில் தொடர்ந்து உக்கிர சண்டை நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

பெரும் எடுப்பில் முன்னேற முயலும் படையினரை, விடுதலைப் புலிகள் வீராவேசத்துடன் தாக்கி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படையினரின் மும்முனைத் தாக்குதல்களின் மத்தியிலும், புலிகள் நடத்திவரும் பதிலடியினால் இராணுவத் தரப்பில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டுநகர் உணவு விடுதியில் குண்டுவெடித்து மூவர் பலி!

கொழும்பு, மார்ச் 20

மட்டக்களப்பு, நகரிலுள்ள முஸ்லிம் உணவு விடுதி ஒன்றில் நேற்று குண்டு வெடித்தது. இந்தச் சம்பவத்தில் முஸ்லிம்கள் மூவர் உயிரிழந்தனர். மேலும் எட்டுப்பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் காத்தான்குடியில் பஸ் ஒன்றை முஸ்லிம் ஊர்காவலர் என்று கருதப்படும் ஒருவர் வழிமறித்து கிரனேட் வீச்சு நடத்தியதில் மூன்று தமிழர்கள் உயிர்ழந்தனர் என்பதும் 17 பேர் காயமடைந்தனர் என்பதும் தெரிந்தவையே.

இதற்கு பதில் தாக்குதலாகவே நேற்றைய சம்பவம் இடம் பெற்றதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பு பகுதியில் புலிகள் - ராணுவம் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 20

மட்டக்களப்பு முந்திரியம் பள்ளம் என்னுமிடத்தில் கடந்த செவ்வாயன்று ரோந்து சென்ற இராணுவ அணி ஒன்றின் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் அச்சமயம் படையினர் பலர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட — சுமார் முந்நூறு பேரைக் கொண்ட — படை அணியே புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

புலிகள் தாக்குதல் நடத்திய சமயம் ஹெலி ஒன்று படையினருக்கு உதவியாகக் கடும் துப்பாக்கித் தாக்குதலை நடத்தியதாகவும் கூறப்பட்டது.

மோதலில் புலிகள் தரப்பில் கப்டன் சேது [சின்னத்துரை ரவிச்சந்திரன் — கோவில் போரதீவு] லெப்ரினன்ட் தீபன் [சுந்தரம் சுதாகரன் — ஆண்டான்வெளி], இரண்டாம் லெப். விதுரன் [கந்தையா ஜீவா — லுணுகல தோட்டம்] ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர்.

[ஒ-5]

## கடற்றொழிலாளர்கள் நேற்று கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 20

தமக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படாததைக் கண்டித்து சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பேரணி முடிவில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

மானிப்பாய் அந்தோனியார் கோவிலில் இருந்தும் பண்டத்தரிப்பு சந்தியில் இருந்தும் நேற்றுக் காலை இரு பேரணிகள் புறப்பட்டு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையை நண்பகல் அளவில் அடைந்தன.

பேரணியினர் உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். அரசாங்க அதிபருடன் பேச்சு நடத்தி ஆவன செய்வதாக உதவி அரசாங்கஅதிபர் உறுதி அளித்ததன் பேரில் பேரணியினர் கலைந்து சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஆனைக்கோட்டை உயரப்புலம் கடற்றொழிலா

[8 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவு, மணலாறில் தொடர்ந்து குண்டு வீச்சு!

## தண்ணீரூற்றில் பெண் பலி!!

முல்லைத்தீவு, மணலாறுப் பகுதிகளில் ஸ்ரீலங்காப் படையினர் கடும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். நேற்றும் பலத்த குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

முல்லைத்தீவு - தண்ணீரூற்றுப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சு நடத்தின. இச்சம்பவத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் தலை சிதறிப் பலியானார். அவரது கணவர் உட்பட மற்றும் சிலர் காயமடைந்தனர்.

சௌந்தரராசா சுமதி [25 வயது] என்பவரே மரணமானவர் ஆவார். அவரது கணவர் கந்தசாமி சௌந்தரராசா [28 வயது] மற்றும்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



அப்ப.. துடுப்பாட்ட மைதானத்திற்கு வெளியிலையும் துடியாட்டம் இருக்கும் எண்டு சொல்லுங்கோ...!

**வடக்கின் இரு பெரும் கிரிக்கெட் போட்டிகள் இன்று**

விவரங்கள் 3 ஆம் 7 ஆம் பக்கங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொல்வின் இருக்கிறாரா?

கொழும்பு, மார்ச் 20

சர்வதேச மகளிர் தினத்தை லங்கா சமசமாஜக்கட்சி கடந்த 9 ஆம் திகதி கொழும்பில் கொண்டாடியது.

அன்றைய தினம் மாலை 6-30 மணிக்கு கொம்பனித் தெருவிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் இருந்து மகளிர் எழுச்சிப் பேரணி ஒன்று ஆரம்பமாக இருந்தது.

அங்கே சிவப்பு வர்ணச் சேலைகளுடன் நூற்றுக்கணக்கான பெண்கள் திரண்டிருந்தனர்.

அவ்வேளை...... அங்கே வந்தார் பொலீஸ் அதிகாரி ஒருவர்.

பேரணியை நடத்த முடியாது என்ற தோரணையில் அவர் பேச்சு அமைந்திருந்தது.

திடீரென இப்படி ஒரு கேள்வியையும் பொலீஸ் அதிகாரி கேட்டார்.

"எங்கே கொல்வின், அவர் எங்கே?" என்று கேட்டார்.

மகளிர் அணிக்கு தலைமை வகித்து அங்கு நின்ற முதுபெரும் அரசியல்வாதியான திருமதி விவியன் குணவர்த்தன சில நிமிடங்கள் விறைத்துப் போனார்.

பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட விவியன் "கொல்வின் இங்கு இல்லை!" என்று அமைதியாகப் பதிலளித்தாராம்!

பொலீஸ் அதிகாரியின் அறியாமையை நினைத்து அவர் மனதுக்குள் சிரித்திருக்க வேண்டும். (ஒ-க)

## கொழும்பை கலக்கிய சத்தம்: நிபுணர்களிடையே சர்ச்சை!

கொழும்பு, மார்ச் 20

கடந்த 11 ஆம் திகதி கொழும்பு மாநகரைக் கலக்கிய குண்டுச் சத்தம் சுப்பர் சோனிக் ஜெட் விமானத்தில் இருந்து கிளம்பிய ஒலி வெடிப்பு என்று விமானப் படையினர் கூறியிருப்பது உண்மையானதா அல்லது கற்பனையா என்பது குறித்து நிபுணர்களிடையே வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஜெட்விமானம் கிளப்பிய சத்தமே அது என்பதை வானிலை அவதான நிலைய முன்னாள் பணிப்பாளர் டி. கே. ஆர். கருணாரத்தினா நிராகரித்து விட்டார்.

அந்த ஒலி வெடிப்பு அதிர்வு, வெடித்து விழுந்த எரி நட்சத்திரம் ஏற்படுத்தியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

1933 ஆம் ஆண்டு இந்தியாவில் பாட்னா என்னும் நகரில் எரி நட்சத்திரம் ஒன்று வெடித்து விழுந்ததினால் ஏற்பட்ட வெடிப்புச் சத்தம் நூறு மைல் தூரம் வரை கேட்கக் கூடியதாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

வானிலை அவதான நிலையத்தின் தற்போதைய பணிப்பாளர் டாக்டர். ஏ. டபிள்யு. மொஹோத்தல இது குறித்துக் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டார்.

சம்பவ தினம் தாம் குறிப்பிட்ட குண்டு வெடிப்புச் சத்தத்தைக் கேட்கவில்லை என்று கூறிய பிரபல விஞ்ஞானி டாக்டர் ஆர்தர் சி. கிளார்க், எரி நட்சத்திரம் வெடித்ததினால் அச்சத்தம் ஏற்பட்டிருக்கலாம் என்ற வியாக்கியானம் குறித்து தமது கருத்தை வெளியிட மறுத்தார்.

ஆனால்— அக் குண்டு வெடிப்புச் சத்தம் விண்வெளியில் வலம் வந்து கொண்டு இருக்கும் விண்கலம் ஒன்று வளி மண்டலத்தினுள் பிரவேசித்த போது ஏற்பட்ட சத்தமாக இருக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

சுப்பர் சோனிக் ஜெட் விமானத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஒலி வெடிப்பு என்று விமானப் படையினர் அளித்த விளக்கம் குறித்து கருத்துத் தெரிவிக்கவும் டாக்டர் கிளார்க் மறுத்து விட்டார்.

அந்தச் சமயம் அப்பகுதியில் விமானம் ஒன்று சென்றதா என்று பற்றி தமக்கு எதுவுமே தெரியாது என்றும் டாக்டர் கிளார்க் சொன்னார்.

வளிமண்டல பௌதிகவியலில் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர் ஒஸ்மண்ட் ஜெபரத்தினா, மர்ம வெடிகுண்டுச் சத்தத்துக்கு சுப்பர் சோனிக் ஜெட் விமானம்தான் காரணம் என்பதற்கு சிறிதளவு ஆதாரம் கூட கிடையாது என்று கூறியுள்ளார்.

ஜெட்விமானம் அதற்குக் காரணம் என்று இலங்கை விமானப்படை விங்கொமாண்டர் விஜிநா தென்னக்கோன் கூறியிருப்பதை ஏற்க முடியாது என்றும் அவர் சொன்னார்.

மர்ம வெடிச்சத்தம் கேட்டவுடன் தாம் கொத்தலாவலை பாதுகாப்பு அக்கடமியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசாரித்ததாகவும், தகுந்த பதில் அப்போது தமக்குக் கிடைக்கவில்லை என்றும் பேராசிரியர் ஜெயரத்தினா மேலும் தெரிவித்தார். [உ-எ]

### உயர்தரப் பரீட்சை மாணவரின்

## அடையாள அட்டைகளை துரிதமாக வழங்க ஏற்பாடு

இவ்வருடம் நடைபெற உள்ள ஜி. சீ. ஈ உயர்தர பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்களுக்கு ஏற்படும் தேவையற்ற கஷ்டங்களையும் கடைசி நேர நெருக்கடிகளையும் தவிர்க்கும் பொருட்டு அவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் விரைவாக வழங்கப்படும்,

ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பந்துல குலதுங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை எல்லாப் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும்—

பாடசாலை மூலம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரத்தில் அதிபர்கள் சிபார்சு செய்ய வேண்டும் என்றும்— தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமக்கான தேசிய அடையாள அட்டையைப் பெற பிரதேச கிராம சேவகரின் அத்தாட்சியைப் பெற வேண்டும் என்றும்— தெரிவிக்கப்பட்டது. [த]

## மூன்று நாட்களின் பின் வல்வையில் இயல்பு நிலை

வடமராட்சி, மார்ச் 20

வல்வெட்டித் துறைப் பகுதியில் மூன்று நாட்களின் பின்னர் மீண்டும் இயல்பு நிலை தோன்றியுள்ளது. மக்கள் நடமாட்டம் வழமைக்குத்திரும்பியது. பாடசாலைகள், அலுவலகங்கள் யாவும் இயங்க ஆரம்பித்துள்ளன. சந்தைகள் கூடுகின்றன.

இடம் பெயர்ந்து சென்ற சில குறிப்பிட்ட குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளன. வல்வெட்டித்துறை கடற் பிராந்தியத்தில் நிலை கொண்டிருந்த கடற்படைப் படகுகளும் சென்று விட்டன.

மீனவர்கள் இரவில் கடலுக்குச் செல்வதை தவிர்த்துக் கொண்டனர். பகலில் கரையோரப் பகுதிகளில் மீன் பிடிப்பதை நேற்று அவதானிக்க முடிந்தது.

புதன்கிழமை காலை முதல் நேற்றுப் பிற்பகல் வரை இராணுவ நடவடிக்கைகள் எதுவுமற்று அமைதி நிலவியது.

இடம் பெயர்ந்த 150 குடும்பங்களுக்கு விடுதலைப் புலிகள் உணவுப் பொருள்களை வழங்கினர். (அ-165)

### நாடு திரும்பிய அகதிகளில்

## மூவாயிரம் பேர் இன்னும் மீளகுடியமர்த்தப்படவில்லை

கொழும்பு, மார்ச் 20

நாடு திரும்பிய இலங்கைத் தமிழ் அகதிகளில் 5 ஆயிரம் பேர்வரையில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். எஞ்சிய மூவாயிரம் பேரை வெகு விரைவில் மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புனர்வாழ்வு அதிகாரசபையின் பணிப்பாளர் திலக் சந்திரசேகரா இதனைத் தெரிவித்தார்.

மொத்தம் 2,522 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 884 அகதிகள் நாடு திரும்பி உள்ளனர் என்றும் அவர் கூறினார். (இ-எ)

## நரசிம்மராவைச் சந்திக்க ரணில் புதுடில்லி செல்வார்

கொழும்பு, மார்ச் 20

கைத்தொழில், விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் ரணில் விக்ரமசிங்கா விரைவில் இந்தியா சென்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து பேச்சு நடத்துவார்.

இந்திய மத்திய கைத்தொழில் அமைச்சர் திரு. பி. ஜே. குரியனையும் அவர் சந்தித்துப் பேசுவார்.

பிரதமர் பி.வி. நரசிம்மராவ் விஞ்ஞான, தொழில் நுட்ப அமைச்சராகவும் பணிபுரிந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில்—

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா கடந்த வாரம் கொழும்பில் ஐனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்த இவ்வாரம் புதுடில்லி செல்லவிருக்கின்றார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் நடத்தப்பட்ட பேச்சுகளின் போது, தமிழகத்தில் இருந்து திரும்பும் தமிழ் அகதிகளின் நிலைமை மற்றும் விடுதலைப் புலிகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து இந்தியத் தூதர் ஜா உரையாடினார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. [உ-எ]

## கெடுபிடிகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

வவுனியா— தாண்டிக்குளம் தடை முகாமில் படையினரின் கெடுபிடிகள் கடந்த சனிக்கிழமை முதல் மீண்டும் அதிகரித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

10 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

பேயாடி கூழாம் குளம் பகுதியில் இருந்து குடியிருப்புக்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்படுகிறது. (த-3)

## கருணாநிதி மகனுக்கு ஜெயலலிதா நிதி உதவி!

சென்னை, மார்ச் 20

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் மகன் மு. க. முத்துவுக்கு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா 5 லட்சம் ரூபா நிதி உதவி வழங்கினார். தாம் வறுமையில் வாடுவதாக திரு. முத்து விடுத்த வேண்டுகோளை ஏற்று முதலமைச்சர் இந்த நிதி உதவியை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கலைஞர் கருணாநிதிக்கும் அவர் மகன் முத்துவுக்கும் இடையில் கருத்து வேறுபாடு இருந்து வருவது தெரிந்ததே. [உ]

### ஆடைகள், மின் கருவிகள் கடத்தல்

## கொழும்பு வர்த்தகருக்கு ரூபா $2\frac{1}{2}$ கோடி அபராதம்!

கொழும்பு, மார்ச் 20

89 லட்சம் ரூபா பெறுமதியான ஆடைகள், மின்சார உபகரணங்கள் மற்றும் வாசனைத் திரவியங்களை சட்டவிரோதமாக நாட்டினுள் கொண்டு வந்ததற்காக கொழும்பு வர்த்தகர் ஒருவருக்கு சுங்கத் திணைக்களம் 2 கோடி 67 லட்சம் ரூபா அபராதத்தை விதித்தது.

அப்பொருள்கள் கப்பலில் கொள்கலன் ஒன்றின் மூலம் கொண்டு வரப்பட்டன. அக்கொள்கலன் கொழும்பில் உள்ள மேற்கு நாட்டுத் தூதரகம் ஒன்றிற்கு விலாசமிடப்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியாவில் ஏற்பட்டுள்ள நிலைமை போராட்டத்தைப் பாதித்துவிடாது

### ஒலிப்பதிவு நாடா வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 18

இந்தியாவில் தோன்றியுள்ள நெருக்கடிகளால் — பின்தளம் இல்லாத நிலையில் எமது போராட்டம் வீழ்ச்சி கண்டு விடும் என்றே உலகம் இப்போது நம்புகிறது. ஆனால் அதற்கு மாறாக இன்றைய நெருக்கடிகள் எமது போராட்டத்தை வலுப்படுத்திச் செல்கின்றன.

— இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச் செல்வன்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம் பெற்ற 'களத்தில் நின்று வேங்கைகள்' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகையிலேயே அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

முழுக்க முழுக்க களத்தில் நிற்கும் போராளிகளால் எழுதப்பட்டு, பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய முதலாவது ஒலிப்பதிவு நாடா இதுவாகும்.

இந்த நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் அரசியற் பிரிவுப் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி, கடற்புலிகள் தளபதி திரு. கங்கை அமரன், கலை, பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி ஜெயா, செல்வி ஜெயந்தி செல்வி ஆர்த்தி மற்றும் விடுதலைப் புலிகள் பிரமுகர்களான கவிஞர் வாஞ்சிநாதன், திரு. தமிழன்பன், யாழ். தளபதி செந்தாளன் ஆகியோரும் கலந்து கொண்டனர்

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகித்தார். "களத்தில் நின்று வேங்கைகள்" ஒலிப்பதிவு நாடாவுக்கு இசையமைத்த கலைஞர்களுக்கு விசேட தளபதி திரு. தமிழ்ச்செல்வன் அன்பளிப்புக்களை வழங்கினார்.

யாழ். மாவட்ட தாக்குதல் பிரிவு பொறுப்பாளர் திரு. தமிழ்மாறன் நன்றியுரை வழங்கினார். [த-15-5]

## மரண அறிவித்தல்

### சிவநாதன் தர்மவாணி

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த ம. சிவநாதன் [மொழி பெயர்ப்பாளர், நாடாளுமன்றம்] - கண்மலர் தம்பதிகளின் புதல்வி செல்வி தர்மவாணியின் [யாழ். பல்கலைக்கழக வர்த்தக பீட முதலாம் வருட மாணவி] ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 11 மணிக்கு கொல்லங்கலட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சிவநாதன்

வி. ஸி. லேன்,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.

(20162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்றல் - சென்.ஜோன்ஸ் பெரும் கிரிக்கெட் மோதல்!

## 88 ஆவது வருடாந்த ஆட்டம் இன்று ஆரம்பம்

— விளையாட்டுத்துறைச் செய்தியாளர் எஸ். ஜே. அற்புதநாதன் —

யாழ்ப்பாணம் மத்திய [சென்றல்] கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் மிகப் பெரும் கிரிக்கெட் மோதல் இன்றும், நாளையும் நடைபெறவிருக்கிறது. 88 ஆவது வருடாந்த மோதல் இதுவாகும்,

இன்றும், நாளையும் காலை 9.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறும்.

இரு திறமைமிக்க அணிகளுக்கிடையில் நடைபெறும் இந்த ஆட்டத்தைக் கண்டு ரசிக்க பெரும் திரளான மக்கள் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு கல்லூரிகளினது மாணவர்களும் ஆதரவாளர்களும் கடந்த ஒரு வாரகாலமாக தத்தமது கல்லூரிக் கொடியை ஏந்திய வண்ணம் யாழ். நகரத் தெருக்களில் கோஷமிட்டபடி சைக்கிள்களில் ஊர்வலமாகச் சென்று நகரை அமர்க்களப்படுத்தி வருகின்றனர்.

இந்த வருட கிரிக்கெட் பருவ காலத்தில் எந்தப் பாடசாலை அணியுடனும் தோல்வியடையாத அணிகள் என்ற பெருமையுடன் இரு அணிகளும் இன்று களத்தில் குதிக்கின்றன.

சென் ஜோன்ஸ் அணிக்கு எம். காண்டீபனும், சென்றல் அணிக்கு கே. பிரபாகரனும் தலைமை வகிக்கின்றனர்.

இன்றைய ஆட்டத்துக்கு திரு. எம். வேதாபரணமும், திரு. ஆர். செல்வராஜாவும் மத்தியஸ்தம் வகிப்பார்கள்.


சென்றல் வீரர்கள் பட்டியல் வருமாறு:— கே. பிரபாகரன், ஈ. ரகுதாஸ், என். விஜயகுமார், என். சுரேஷ், எஸ். ஆகாஷ், எஸ். மணிவதனன், என். முகுந்தன், ஆர். முரளி, ஜி. விஜேந்திரகுமார், பி. ரமேஷ், எஸ். கமல்ராஜ், எம். குமரேசன், கே. சுரேஷ், கே. விம்நாதன், எஸ். லக்ஷ்மிகரன், ரி. சதீஸ்குமார்.

சென் ஜோன்ஸ் வீரர்கள் பட்டியல் வருமாறு:— எம். காண்டீபன், பி.ரி. ஜெர்ஸன், ஏ. யோகதாஸ், ரி. பிஷ்மன், என். சுஜித்குமார், எம். துஷாரா, ஜே ஜி. பிரதீபன், எம். ராஜசேகரம். ஜே எக்ஸ். மதியாளன், ஜி. ஸ்ரீதரன், பி. சஞ்சீவ், கே. பிரதீபன், ஆர். கிருபன், எல். ஹம்ஸரூபன், ரி. சிவரூபன்.


கடந்த 1985, 1986, 1987, 1988, 1989 ஆகிய ஆண்டுகளில் நாட்டு நிலைமை காரணமாக இந்தப் போட்டிகள் நடைபெறவில்லை.

1990 இல் சென். ஜோன்ஸ் அணி இன்னிங்ஸால் வெற்றியீட்டியது. 1991 இல் மீண்டும் இப்போட்டி தடைப்பட்டது. திரும்பவும் இவ்வருடம் மிகப் பெரும் மோதல் [Big Match] நடைபெறுகிறது.

இதுவரை நடைபெற்ற 87 ஆட்டங்களில் 32 இல் சென்.ஜோன்ஸ் அணியும், 20இல் சென்றல் அணியும் வென்றுள்ளன. 27 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. எட்டு [illegible] தகவல் இல்லை.



யாழ். சென். ஜோன்ஸ் அணி



யாழ். சென்றல் அணி

---


## விசேட அறிவித்தல்

நாளை [21-03-1992] சனிக்கிழமை நடைபெற உள்ள மாபெரும் கிரிக்கெட் போட்டியினை முன்னிட்டு மாணவர்கள் விடுத்துள்ள கோரிக்கைக்கு அமைவாக அன்றைய தினம் யாழ். கோட்டத்திலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும், ஏனைய அண்மித்த கல்வி நிறுவனங்களும் அன்றைய தினம் விடுமுறை வழங்கி ஒத்துழைக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

பொதுச் செயலாளர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

[20151]



## யா/ஆனைப்பந்தி மெதடிஸ்மிஷன் வித்தியாலயம்

### பாடசாலை அபிவிருத்திச் சபை

### பொதுக்கூட்டம் - 1992

மேற்படி பாடசாலை அபிவிருத்திச்சபைப் பொதுக் கூட்டம் 22 - 03 - 1992 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எமது வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

க. கணேசன்,
அதிபர்.

ஏ. எஸ். தியாகராஜா,
செயலாளர்.

(20147)



## கலை, வர்த்தகக் கல்லூரி

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)
374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வெளிவாரி மாணவர்களுக்கான
**கலந்துரையாடல்**

**காலம்: 06-04-92 — 06-05-92 வரை**

**நேரம்: காலை 8.00 மணி**

கணக்கியல் — ஸ்ரீ

பின்வரும் பகுதிகள் செய்து முடிக்கப்படும்

வாடகைக் கொள்வனவு, இறைக்கணக்கு, கொள்கலன் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, பங்குடமையினை பகுதி பகுதியாகக் கலைத்தல்

| | |
|---|---|
| முகாமைத்துவம் | — பிரபல ஆசிரியர் |
| பொருளியல் | — குமாரவேல் |
| தமிழ் | — திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் | — திரு. ஜோதீஸ்வரன் |
| அளவியல் | — திரு. சயந்தன் |
| அரசியல் | — குமரர் |

குறிப்பு:

- முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும்
- அச்சடித்த பாடக்குறிப்புகள் இலவசமாக வழங்கப்படும்.

- நிர்வாகி.

[கி-1668]



யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
வணிக ஜோதி

## 14 ஆவது வெளியீட்டு விழா

| | |
|---|---|
| காலம்: | 1992-3-20 வெள்ளிக்கிழமை முற்பகல் 11-00 மணி |
| இடம்: | கல்லூரி பிரதான மண்டபம் |
| தலைமை: | செல்வன் பா. வாசன் |
| சமர்ப்பணம்: | வர்த்தகக் கல்வியின் சிற்பி மு. சுப்பையா அமரருக்கு |
| பிரதம அதிதி: | திரு. சி. வேலாயுதம் [யாழ். கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர்] |
| விசேட அதிதி: | திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள் [உதவி அரச அதிபர், நல்லூர்] திரு. சி. சிவராசா அவர்கள் [உதவிக் கல்விப் பணிப்பாளர்] |
| முதற்பிரதி பெறுநர்: | திரு. ஈ. சரவணபவன் அவர்கள் [நிர்வாக இயக்குநர் - உதயன்] |
| ஆய்வுரை: | திரு. தே. ஜெயராமன் அவர்கள் [விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்] |

★ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி:
— வர்த்தக மாணவர் மன்றம்.

[20120]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிற்கு பயணம் செய்வது இன்னும் ஆபத்தான காரியம்

## ஒருதரப்பு வெற்றி சமாதானம் தரமாட்டாது 'சண்டே ஐலண்ட்' விமர்சனக் கட்டுரையில் தகவல்

கொழும்பு, மார்ச் 20

கிழக்கு மாகாணத்திற்குப் பயணம் ஒன்றை மேற்கொள்வது இன்னும் ஆபத்தான காரியமாகவே உள்ளது.

ஹபரணை அல்லது கெப்பிட்டிக்கொல்லாவ எல்லையைத் தாண்டாது தெற்கில் கதிரைகளில் அமர்ந்து இருந்து கொண்டு உபதேசம் செய்யும் அரசியல்வாதிகள் மற்றும் மதத்தலைவர்களுக்கு இதனை நான் பரிந்துரை செய்கின்றேன்.

'சண்டே ஐலண்ட்' ஆங்கில வார இதழில் எழுதிய விமர்சனக்கட்டுரை ஒன்றில் திரு. ரோஹான் அபயவர்த்தனா முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

'ஒருதரப்பு வெற்றிகாணுவதால் நிரந்தர சமாதானம் வந்துவிடாது' என்ற தலைப்பில் இக்கட்டுரை பிரசுரமாகி உள்ளது.

கடந்த வாரம் சர்வோதய இயக்கத் தலைவர் டாக்டர் ஆரியரத்னாவுடன் தாம் திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொண்ட பயணம் குறித்து இக்கட்டுரையில் திரு. அபயவர்த்தனா விவரித்துள்ளார்.

கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

திருகோணமலை, சேருவில, பதவியா, கந்தளாய் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தோம்.

அந்த விஜயங்கள் நிச்சயமாக எமது கண்களைத் திறந்தன. யுத்தத்தில் ஒருதரப்பு வெற்றிகண்டுவிட்டால் மட்டும் நிரந்தர சமாதானம் ஒருபோதும் வந்துவிடாது என்பது அவற்றில் ஒன்றாகும். எந்தத் தரப்பினருக்கும் வெற்றிகிட்டாத நிலையில் மக்களின் உள்ளத்தை வென்றெடுப்பதால்தான் சமாதானத்தைக் காண முடியும்.

ஹெலிக்கொப்டர்கள் மற்றும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்றி பாதுகாப்புப் படையினரால் 'விடுவிக்கப்பட்டதாக'க் கூறப்படும் பகுதிகளுக்கு நாம் சென்றோம். ஆனால் அப்பகுதிகளில் தீவிரவாதிகள் திடீர்த் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

காட்டுப் பகுதிகளால் சூழப்பட்ட இவ்விடங்களில் படையினர் வீதிகளை பகல் வேளைகளில் காவல்புரிந்து வருகின்றனர். மாலையானதும் படையினர் முகாம்களுக்குத் திரும்பி விடுகின்றனர்.

பின்னர் அப்பிரதேசம் மனிதசஞ்சாரமே இல்லாத இடமாகி விடுகின்றது சேருவில பௌத்த ஆலயத்திற்குச் செல்லும் வீதி, போதிய பாதுகாப்புப்படையினர் இல்லாத காரணத்தினால் வாரத்தில் சில தினங்களே பாவனைக்கு திறந்துவிடப்படுகின்றது. வீதி மூடப்பட்ட தினத்தில் கிராமவாசி ஒருவர் திடீர் என சுகயீனம் அடைந்தால் அவர் கடவுளே கதி என்று இருக்க வேண்டியதுதான்...

இவ்வாறு அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைத் தமிழர் பாகிஸ்தானில் கொலை

கொழும்பு, மார்ச் 20

இலங்கைத் தமிழர் ஒருவர் பாகிஸ்தானில் கொள்ளையர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கொழும்புக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (த-எ)

## 14 தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டன


கொழும்பு, மார்ச் 20

பத்து லட்சம் ரூபா பெறுமதியான 14 தங்க பிஸ்கட்டுகளும், 14 தங்கச்சங்கிலிகளும் நேற்று முன் தினம் கொழும்பு செட்டித்தெருவில் உள்ள கடை ஒன்றில் இருந்து இரகசியப் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக, இந்தியர் ஒருவர் உட்பட நான்கு [illegible] கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

[த-எ]

## பிறந்தநாள் வாழ்த்து



செல்வன்

### ★ றோ. மார்க் சுறோஜன் ★

பரந்தன் நவஜீவனத்தில் வசிக்கும் றோகன்–சுஜாதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் மார்க் சுறோஜன் இன்று (20-03-1992) தனது முதலாவது பிறந்த நாளை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பாட்டன், பாட்டிமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார். மாமிமார் மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

[4549]

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### மகேஸ்வரன் - இமேகா

டென்மார்க்கில் வசிக்கும் மகேஸ்வரன் சசிகலா தம்பதிகளின் செல்வப் புதல்வி இமேகா தமது பிறந்த தினத்தை இன்று 20-03-1992 தமது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், சித்தப்பாமார், [மாமன்மார் ராஜன் (பிரான்ஸ்], கண்ணன் (கனடா), ராஜ் (கோண்டாவில்), சித்திமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவரை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென அம்பாள் அருளோடு வாழ்த்துகின்றனர்.

தகவல்:
து. பாலசுந்தரம்.

கோண்டாவில் கிழக்கு. (20152)

## பிரதேசச் செய்தியாளர்கள்

உதயன் பத்திரிகையின் பிரதேசச் செய்தியாளர்களாகப் பணி புரிவதற்குத் தகுதியானோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ விண்ணப்பதாரர்கள் செய்திச் செவி உள்ளவர்களாகவும், புதினங்களை மணந்து பிடிக்கக் கூடியவர்களாகவும். விடயங்களைத் துருவி அறிய வல்லவர்களாகவும் இருக்க வேண்டும்.

★ தமிழில் சிறப்பாக எழுதக் கூடிய பாண்டித்தியமும் ஆங்கில அறிவும் அவசியம். கல்விப் பொதுத் தராதர உயர் வகுப்பில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

★ விண்ணப்பதாரர் தாம் மனுச் செய்யும் பகுதியில் நிரந்தரமாக வசிப்பவர் என்பதை அத்தாட்சிப் படுத்த வேண்டும். 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.


★ செய்தியாளராக பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆனால் வேறு பத்திரிகைகளின் செய்தியாளர்களாகப் பணிபுரிவோரின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

★ முழுமையான சுய விவரங்களுடனும், சான்றிதழ்கள், நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகளுடனும் **22-03-1992** பிற்பகல் 4 மணிக்கு நேரில் வரவும்.

| | |
|---|---|
| நெல்லியடி | சங்கானை |
| சுன்னாகம் | கரணவாய் |
| பண்டத்தரிப்பு | இணுவில் |
| வல்வெட்டித்துறை | மாதகல் |
| அளவெட்டி | கைதடி |
| நீர்வேலி | வரணி |
| புத்தூர் | சங்கத்தானை |
| கல்வியங்காடு | |

பிரதம ஆசிரியர்,
**உதயன் பணிமனை,**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



### லெப்டினனன்ட் பொஸ்கோ

[கணபதி ஸ்ரீரஞ்சன்]

வீரஜனனம்: **15–04–1969**

வீரமரணம்; **01–04–1991**

திதி: 20 — 03 — 1992

அந்நியன் எம்மை ஆள்வதா என்று
பொங்கியே தலைவன் தானையில் சேர்ந்தீர்
இந்தியன் என்ன எம்மவன் என்ன
அத்தனை பேரும் துச்சமே என்று
மண்ணினை மீட்க மண்ணிலே வீழ்ந்து
விதையாகிப் போனீர் மாவீரனானீர்!

உன் நினைவால் வாடும்

பெற்றோர், சகோதரர்கள்,
அண்ணன், அண்ணி, பெறாமக்கள்,
அக்கா, அத்தான், மருமகள்,
நண்பர்கள், உற்றார், உறவினர்கள்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

(20112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் இளைஞர் தாக்கல் செய்த
# அடிப்படை உரிமைமீறல் வழக்கை விசாரிக்க உயர் நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, மார்ச் 20

திருகோணமலை மாவட்டம்-சீனக்குடா அகதி முகாமில் இருந்தபோது பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு தற்போது வெலிக்கடை புதிய மகஸின் சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள இரத்தினம் பாலகிருஷ்ணன் என்ற தமிழ் அகதி தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமைமீறல் வழக்கை விசாரணை செய்வதற்கு உயர்நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கியது.

நீதியரசர்கள் திஸ்ஸ டயஸ் பண்டாரநாயக்கா, கே. எம். எம்.பி.குலதுங்கா, ஆர். என். எம். திரரத்னா ஆகியோர் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு வந்தது.

வாதி தமது மனுவில் கூறியிருந்ததாவது; சீனக்குடா கிளப்பன்பேர்க் அகதிமுகாமில் தங்கியிருந்த என்னை 12-11-1990 இல் விமானப் படையினர் கைது செய்தனர். காரணங்கள் எதனையும் கூறாது என்னுடன் சேர்த்து வேறு பல அகதிகளையும் விமானப்படையினர் அச்சமயம் கைது செய்தனர். அகதி முகாமில் தஞ்சமடைவதற்கு முன்னர் நான் கிண்ணியாவில் பொற்கொல்லராகத் தொழில்செய்து வந்தேன்.

13-6-1990 அன்று எனது வீட்டுக்கு அருகில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும்இடையே கடும் சண்டை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நானும் அப்பகுதி வாசிகளும் அகதிமுகாமுக்குச் சென்றோம்.

என்னுடன் தனிப்பட்ட முறையில் குரோதம் கொண்டிருந்த ஒருவர் கொடுத்த பொய்யான தகவலைத் தொடர்ந்தே படையினர் என்னைக் கைது செய்தனர்.

அரசமைப்புச் சட்டத்தில் உள்ள ஷரத்துகள் 13 (1), 13 (2) ஆகியவற்றை மீறி சட்டவிரோதமாக என்னைக் கைது செய்ததுடன்; சட்ட விரோதமாக என்னைத் தடுத்தும் வைத்துள்ளார்கள். இது எனது அடிப்படை உரிமையை மீறுவதாக உள்ளது. ஆகவே எனது அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்ய உயர்நீதிமன்றம் அனுமதி அளிக்கவேண்டும்.

—இப்படி மனுதாரர் தனது மனுவில் கோரியிருந்தார்.

இவ் விண்ணப்பத்தைஏற்ற உயர்நீதிமன்றம், மனுதாரரின் அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் போவதாக அறிவித்தது.

இம் மனுவில் விமானப் படைத் தளபதி எயர்வைஸ் மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தனா, வெள்ளைமணல் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி, வெலிக்கடை புதிய மகஸின் சிறைச்சாலை அத்தியட்சகர், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் காட்டப் பட்டுள்ளனர்.

பிரதிவாதிகள் தங்கள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய மே மாதம் 10 ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கிய உயர்நீதிமன்றம், மனு மீதான அடுத்த விசாரணை மே மாதம் 25 ஆம் திகதி இடம் பெறும் என்றும் தெரிவித்தது.

மனுதாரர் சார்பில் மோஹன் செனிவிரத்ன, அமரசேன ஹெற்றிகே, செல்வி பத்மா நாகேந்திரன், கே. எஸ். கணேசலிங்கம் ஆகியோருடன் கல்யாநந்த திறானகம ஆஜரானார்.

## நீதிமன்றை அவமதித்ததாக அரச அதிபர் மீது வழக்கு

கண்டி மேல்நீதிமன்றத்தை அவமதித்ததாக மாத்தளை அரசாங்க அதிபர் கே. எம். டபிள்யு. ஈ. கரலியத்த மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

வழக்கு ஒன்று சம்பந்தமாக கண்டி மேல் நீதிமன்றம், மாத்தளை அரச அதிபருக்கு பிறப்பித்த உத்தரவு தொடர்பாக அவர் நீதிமன்றப் பதிவாளருக்குக் கடிதம் ஒன்றை எழுதினார்.

அப்படிக் கடிதம் எழுதிய சம்பவமே நீதிமன்றத்தை அவமதிப்புச் செய்ததாக உள்ளது என்று தெரிவிக்கப் பட்டது.

கடந்த வாரம் இது தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் மாத்தளை அரச அதிபர் ஆஜரானார்.

நீதிமன்றத்தை அவமதிப்புச் செய்ததற்காக அவரை ஏன் தண்டிக்கக்கூடாது என்று அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அரச அதிபர் தாம் சுற்றவாளி என்று சொன்னார்.

விசாரணையை மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி டீ. இஸட் குணவர்த்தனா ஒத்தி வைத்தார். (இ-எ)

## மேஜர் ஒருவரும் உயிரிழந்தார்

ஆனையிறவில் அண்மையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த படையினரில் ஒருவர் மேஜர் பிரியந்தா நிஹால் கருணாரத்னா என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர், முன்னாள் பொலீஸ் இன்ஸ்பெக்டர் எச். ஜி. கருணாரத்னாவின் புதல்வர் ஆவார். அவரது சகோதரர்களில் ஒருவர் விசேட அதிரடிப் பொலீஸ்படையில் இன்ஸ்பெக்டராக இருக்கிறார். அவரின் பெயர் உபாலி கருணாரத்னா என்றும் அறிய வருகிறது. (த-எ)

## யாழ்ப்பாண விஜயம் தொடர்பாக
# தெற்கில் தொடர் கூட்டங்கள் நடத்த பிக்குகள் ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 20

தாம் யாழ்ப்பாணத்திற்கு மேற் கொள்ளவிருக்கும் விஜயம் குறித்து தென் இலங்கையில் தொடர் கூட்டங்களை நடத்த பத்துப்பேர் கொண்ட பௌத்த பிக்குகள் குழு திட்டமிட்டிருக்கின்றது.

இத்தொடரில் முதலாவது கூட்டம் இம்மாதம் 23 ஆம் திகதி நடத்தப்படவிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

''எமக்குத் தேவை சமாதானமே. நாம் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல.''— இப்படி யாழ்ப்பாணம் விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ள பௌத்த பிக்குகள் தெரிவித்தனர் என்றும் அவ் வட்டாரங்களில் தெரிவிக்கப் பட்டது.

இலங்கை பௌத்த பிக்குகள் இனவாதிகள் என்று வெளிநாடுகளில் ஏற்பட்டுள்ள தவறான கருத்தை மாற்றி அமைப்பதும் பௌத்த பிக்குகளின் உத்தேச யாழ். விஜயத்தின் நோக்கமாகும் என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் கூறின. [த-எ]

## மன்னாரில் மழை

மன்னார், மார்ச் 20

மன்னாரில் கடந்த புதன் கிழமை மழை பெய்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [த-10]


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



வழிகாட்ட வந்தது: 15 — 07 — 1915

ஒளிநோக்கி விரைந்தது: 21 — 02 — 1992

### சரவணமுத்து நாகலிங்கம்பிள்ளை
(சாமியார்)

கடந்த 21-02-1992 அன்று புங்குடுதீவில் சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரும், சைவ மெய்த் தொண்டருமான K. V. S. நாகலிங்கம்பிள்ளை [சாமியார்] அவர்களின் வீட்டுக் கிருத்தியம் 21-3-92 சனிக்கிழமை 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இதில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் திடீர் மறைவின்போது கலங்கும் எமக்கு இடம்பெயர்ந்து இக்கட்டான நிலையில் வாழ்கின்றோமே என்ற எண்ணத்தைக் கூட மறந்து எல்லா வழிகளிலும் உதவிகள் புரிந்த அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், புங்குடுதீவு, கோப்பாய் வைத்தியசாலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தந்தையாரின் இறுதிக் கிரியையை புங்குடுதீவில் நடத்தி வைத்த திரு. P. நாகராசாவிற்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புனிதா பில்டிங்,
கே. கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

[20150]

NEW SCIENCE HALL
யாழ்ப்பாணம்.

92 A/L
ZOOLOGY
★ GENETICS ★

திரு. தம்பிராஜா
B. Sc.

ஆரம்பம்:
22 — 03 — 1992
12-00 - ஞாயிறு
(சி/1679)

## விசேட அறிவித்தல்

NEW SCIENCE ACADEMY
&
NEW SCIENCE HALL
JAFFNA

எதிர்வரும் சனிக்கிழமை 21-03-1992 கிரிக்கெட் விளையாட்டு போட்டியை முன்னிட்டு 92 A/L, 93 A/L வகுப்புக்கள் யாவும் காலை 8-30 மணியுடன் நிறுத்தப்படும்.

★ இம்முறை பரீட்சைக்கு தோற்றும் 91 A/L மாணவர்களுக்கு வழமை போல் வகுப்புக்கள் நடைபெறும். அத்துடன் செவ்வாய் நடைபெறும் Botany வகுப்பு சனிக்கிழமை காலை 9-00மணி முதல் 12-00 மணி வரை நடைபெறும்.

★ ஞாயிறு வழமை போல் அனைத்து வகுப்புக்களும் நடைபெறும்.

— நிர்வாகி.

[சி-1678]

## AIKAYES அறிவித்தல்

### உற்றார், உறவினர், நண்பர்களுக்கான வடபகுதி தனியார் உணவு விநியோகம்

உங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் கொழும்பிலிருந்து உங்களுக்காக எம்மிடம் ஒப்படைத்த அத்தியாவசிய உணவுப் பொருள்களை திட்டமிட்டபடி லொறிகள் மூலம் கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக அனுப்ப முடியாமல் போனதால், அப்பொருள்கள் கடந்த 31-12-1991 இல் கப்பல் ''MV - PHAROS CE'' மூலம் பருத்தித்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் எதிர்பாராத விதமாக, மேற்படி பொருள்கள் காங்கேசன்துறையில் இறக்கி வைக்கப்பட்டன. இதனால் நாம் மிகப்பெரிய சிக்கலில் தள்ளப்பட்டோம்.

பின் எமது பாரிய பிரயத்தனத்தின் பேரில் மொத்தம் 125 மெ/தொன் பொருள்களில் 50 மெ/தொன்னிற்குமேல் பொருள்கள் சோர்வுடன், காங்கேசன் துறையிலிருந்து ''MV MIRINAL CE'' என்னும் கப்பலில் ஏற்றப்பட்டு பருத்தித்துறையில் இறக்கப்பட்டு இப்போது எம்மிடம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வேளையில் மக்களின் விநியோகத்திற்காக வந்த பொருள்களில் காங்கேசன்துறையில் ஏற்பட்ட பொருள் குறைவு தொடர்பாக எமது தலைமைக் காரியாலயமும், இந்த விநியோகத்துடன் தொடர்புடைய முக்கியஸ்தர்களும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளார்கள்.

எது எவ்வாறாயினும், ஏற்பட்ட பொருள் சோர்வை நிவர்த்தி செய்து விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக எமக்கு அறிவித்தல் கிடைத்துள்ளது.

ஆகவே, இருப்பதைக் கொண்டு முதலில் விநியோகத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

ஒவ்வொரு உ. அ. அதிபர் பிரிவு ரீதியாகவும் ஒரு மையத்தில் வைத்து விநியோகம் மேற்கொள்ளப்பட இருப்பதால் விநியோகத் திகதிகளை சில தினங்களில் பத்திரிகை விளம்பரங்களில் தயவு செய்து கவனிக்கவும். தயவு செய்து வெற்றுக்கலங்களும், வெற்று உறைகளுடனும், அடையாள அட்டை அல்லது உத்தியோக பூர்வமான அத்தாட்சியுடனும் வரவும். மேலும், கடிதங்கள் சகலருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. முகவரி மாறியவர்கள், இடம் பெயர்ந்தவர்கள் தயவுசெய்து தங்கள் தங்கள் தபாலகங்களில் தொடர்பு கொள்ளவும்.

AIKAYES - நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

[சி/1724]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை

1992 ஆம் ஆண்டுக்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர், டயரிகள் மலிவு விலையில் எல்லாப் புத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றன. அன்பளிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு. திருக்கணிதம், சாவகச்சேரி. [சி-1723]

### தேவை

யாழ். நகரில் இருக்கும் ஆங்கில மருந்துச்சாலைக்கு அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை. ஆங்கில அறிவும், கணக்கியல் ஆற்றல் உள்ளவர்களும் மாநகர சபைக்கு உட்பட்ட இடத்தில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. 392, மே. பா உதயன், யாழ்ப்பாணம். [20110]

### மணமக்கள் தேவை

32 வயது Ph. D, நட்சத்திரம் சதயம், பாவம் 27/16, 31 வயது Ph. D, U. K. நட்சத்திரம் சுவாதி, பாவம் 27/16 27 வயது, கனடா, நட்சத்திரம் சதயம் செவ்வாய் 8, ல/ரா பாவம் 69/16 வந்து திருமணம் செய்வார்கள். ABCDE 20, கண்டி வீதி, சுண்டிக்குளி. [20119]

### அம்பாள் திருமண சேவை

32 வயது Bank Staffக்கு யாழ் நகரில் இருந்து மூன்று மைலுக்குள் இருக்கும் மணப்பெண்ணும், 33 வயது B.Sc மணமகனுக்கு கொழும்பில் வேலை செய்யும் மணப்பெண்ணும் தேவை. விண்ணப்பம் ரூ பா 50/- சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர். [20142]

### சமூகக்கல்வி/ வரலாறு

சமூகக்கல்விக் குறிப்புகள் ஆண்டு- 10 (வினா - விடை), பரீட்சை வழிகாட்டி O/L (வரலாறு/ சமூகக்கல்வி), வரலாறு ஆண்டு- 9 (பயிற்சிகள்) விற்பனையாகின்றன. துரித மீட்டலுக்கு ஏற்றவை ஆக்கம்: நா. மயில்வாகனம். [20092]

## PHYSICS

Mr. ரவீந்திரநாதன்
B.Sc. [Cey.] Dip-in-Ed.

93 A/L 6-15 a.m 7-15 ஒளியியல் (கோள ஆடிகள்)
92 A/L 7-30 a.m. 8-30 வெப்பவியல் (வெப்பக் கடத்தல்)
9-00 a.m. 10.00 சடப்பொருளியல் (மேற்பரப்பிழுவிசை)
93 A/L 1-30 p.m. 2-30 பொறியியல்
91 A/L 2-30 p.m. 3-30 மீட்டல்
4-30 p.m. 5-30 புலங்கள்
5-30 p.m. 6-30 ஒலியியல்

21-03-1992 முதல் நேர அட்டவணைப்படி வகுப்புகள் நடைபெறும்.

**Personal New Science Centre,**
Elilakam Front Lane,
Jaffna.
[சி-1672]

### இலவச திருமண சேவை

30 வயது, சதய நட்சத்திர குற்றமற்ற, Computer Beauty Theraphy, Dress Making, Hair Style & Icing பயின்ற மணப் பெண்ணுக்கு கனடா மணமகன் விரும்பத்தக்கது. து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4540]

36 வயது, பூசம், கணக்காய்வுப் பிரிவில் பணி புரிபவருக்கு 1963 மே 5—13 திகதிக்கு இடையில் பிறந்த இடபம், மிதுனம், துலாம், விருச்சிகம் அல்லது தனு இலக்கினம் உள்ள மணமகள் தேவை. து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4547]

### வரலாறு ஆண்டு - 10

புதிய பாட நூலுக்கமைய வினா - விடைகளாகப் புதிதாக வெளிவந்து விற்பனையாகின்றது. பயிற்சிகளுக்கான விடைகளும் உள்ளன. பரீட்சைகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு ஏற்றது. ஆக்கம்: நா. மயில்வாகனம். [20139]

## தட்டுப்பாடு

கொழும்புத்துறை, மார்ச் 20 யாழ் மாவட்டத்தின் பெரும்பாலான உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச செயலகங்களில் நற்சான்றிதழ் வழங்கும் பத்திரங்கள் மற்றும் வதிவிட அத்தாட்சிப் பத்திரங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. [த-30]

# உயர்கலைக் கல்லூரி

ஆனைப்பந்தி.

[பேராதனை பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம்]


பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கான
பதிவு செய்தல்:
**92 / 93 G. A. Q.**
பதிவு செய்வதற்கான முடிவு திகதி;-
**31 - 03 - 1992**

★ பேராதனை பல்கலைக்கழக விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் வந்துள்ளன.
★ பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்/பயிலுனர் ஆசிரியர்கள், G. C. E. A/L மூன்று பாடங்களில் சித்தி அடைந்தோர் ஆகியோர் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.
★ விண்ணப்பத்துக்கான ஆவணங்கள், அறிவுறுத்தல்களையும் 19 - 03 - 1992 இல் இருந்து இக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.
★ முதல் வரும் 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும்.

[சி-1675] — பதிவாளர்.

# முதலாம் வருட நினைவஞ்சலி

மண்ணகம்: 10 — 07 — 1968



விண்ணகம்: 17 — 03 — 1991

செல்வி
## யூலியற் றதினி சூசைப்பிள்ளை

''சீவியத்தில் நினைவுற்றோரே
மரணத்திலும் மறவாதீர்கள்''

இத்தரை மீதினில் இன்பமுடன் - நீ வாழ
அத்தனையும் நாம் செய்தோம் - மகளே!
இத்தனையும் எனக்கு இனி வேண்டாமென்று
கர்த்தனை நாடினாயோ - மகளே!
பலநோய் உனக்கு உண்டென்று - மிகு
பாசத்துடன் நாம் வளர்த்தோம்.
பாரினில் எனக்கு இனி இடமில்லை என்று
பரமனடி ஏகினாயோ - மகளே!
காணும் இடமெல்லாம் உன் கைவண்ணம் தானம்மா!
எவ்வண்ணம் நாம் மறப்போம் உன் வண்ண முகம்-
தானதனை.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று [20-3-92] வெள்ளிக்கிழமை பிற்பகல் 5-00 மணியளவில் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
தந்தை, தாய்,
சகோதரர், சகோதரிகள்.

''ஞான அகம்'',
அச்சுவேலி. [4542]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் இராசையா செல்வராசா

[இளைப்பாறிய ஆசிரியர்]

தோற்றம்: 18—06—1920
மறைவு: 19—02—1992


எங்கள் குடும்பத்தின் தலைவரே! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

'சுபசதனம்',
சம்பியன் லேன்,
கொக்குவில். [சி-1680]

# 60 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 14 — 04 — 1958
உதிர்வு: 21 — 01 — 1992



செல்வன்
## வீரசிங்கம் திருஞானப்பிரகாசம் (திரு)

பாசமுள்ள எம்முடன் காலமெல்லாம்
கலந்துறவாடியிருப்பீரென காத்திருந்த
எமை மறந்து கடுகதியில் போனதென்ன?

இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்தி கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்,
மருமக்கள்.

'இராணி இல்லம்',
கைதடி வடக்கு,
கைதடி. [20136]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# தப்ப முடியாது!

காலைக் கதிரவன் வானத்தில் எழுந்ததுமே சுட்டெரிக்கிறான். மணிக்கூட்டின் முன் ஓரிரண்டு தடவைகள் முழுச் சுற்றும் தாண்டியதும் கண்கள் தீயாக எரிகின்றன. சற்று நேரம் சென்றாலோ உடம்பெல்லாம் வெந்து போகிறது!

மனிதனுக்கு மட்டுமா இந்த வேதனை? சூழ உள்ள மரங்களைப் பாருங்கள். இலையுதிர் காலம் ஆரம்பித்து விட்டதால் அவை இலைகளை பழுத்துச் சொரிகின்றன. பல மரங்களில் இலைகள் பழுப்பதற்கு முன்னரே கருகி வீழ்கின்றன. வெம்மையின் விளைவு இது!

யாழ்ப்பாணத்திலும் வடக்கின் ஏனைய பகுதிகளிலும் பங்குனி மாதம் பிறந்து விட்டாலே வெய்யிலின் தகிப்புத் தாங்க முடியாதது தான். அது பருவ காலத்தின் வழமையான விளைவு; தாக்கம் என்றும் கூறலாம்.

கடந்த வருடம் மாரி மழை போதியளவு பெய்யவில்லை. அதன் விளைவும் சேர்ந்து இம்முறை வெப்பமும் வரட்சியும் தமிழ்ப் பகுதிகளைச் சோதிக்கப் போகின்றன. குறிப்பாக வவுனியாவுக்கு இப்பால் நதிகள் எதுவும் இல்லாத வானம் பார்த்த பூமி இங்கு மழை பொய்த்து வரட்சி வழமையாகி விட்டால் பெரும் அனர்த்தம் நேரலாம்.

அதனால் தான் தமிழரசர்கள் காலத்தில், குளங்களையும், ஏரிகளையும் வெட்டியதோடு வான் மழைக்கு உறுதுணையாக விளங்கும் வன வளத்தையும் பேணினார்கள்; பெருக்கவும் செய்தார்கள். அந்நியர்கள் வந்து சொந்த மண்ணை நம்பியிருக்கும் பொருளாதாரத்துக்குப் பதிலாக, தமிழ்ப் பகுதிகளில் தங்கு நிலைப் பொருளாதாரத்தை உருவாக்கினார்கள்.

அதனால் தமிழர்கள் தாம் பெரிதும் படித்தவர்கள் என்ற வரட்டுக் கௌரவத்துடன் தமது தாயகப் பூமியின் வளத்தையும், வனப்பையும் பேணிக் காக்கவும், மேலும் வளர்க்கவும் தவறி விட்டார்கள்; மறந்து போனார்கள்.

அப்போது விதைத்த வினைக்கு இப்போது அறுவடை செய்துகொண்டிருக்கிறோம். இதனை ஒரு படிப்பினையாகக் கொண்டு எங்கள் அன்னை பூமியின் வளங்களையும் வனப்புகளையும் பேணவும், மேம்படுத்தவும் நாம் பயில்வது எப்போது? அது பற்றிய உணர்வும் அதன் வழிச் செயற்பாடும் எம்மத்தியில் உதிப்பது எந்நாளில்?

மலைகளும், நதிகளும் நிறைந்த தென்னிலங்கையில், மலையகத்தில் கூட இம்முறை கடும் வரட்சி நிலவுகிறது. வழமையான வட-கிழக்குப் பருவப் பெயர்ச்சி மழை பொய்த்து விட்டது. அந்நியச் செலாவணி தேடித்தரும் தேயிலைத் தோட்டங்கள் கருகிவிட்டன. நீர்த்தேக்கங்கள் வற்றிவிட்டன. மின்சார உற்பத்தி குறைந்து விட்டது, அதனால் கைத்தொழில் உற்பத்திக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

மழை இல்லாவிட்டால், வரட்சி நீடித்தால் உற்பத்தி-பொருளாதாரம்-பாதிப்புறுவது மட்டுமன்றி பல கொடிய நோய்கள் உண்டாகி மக்களே இறக்க நேரிடலாம்.

நம்மைச் சுற்றியுள்ள சூழலையும், இயற்கையையும் தீண்டினால் அல்லது பாதுகாக்கத் தவறினால் இத்தகைய ஆபத்துகள் அடிக்கடி வரும்.

இயற்கையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு மனிதனே காரணமாகவும், உடந்தையாகவும் இருக்கின்றான். அதனை சகல தேசத்தவரும் சரியான நோக்கில் பார்க்கத் தவறினால் அதன் பொருட்டு அனர்த்தங்களை அனுபவிக்க நேரிடும். தப்பவே முடியாது!

## தபால்கள் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

''குமாரி'' கப்பலில் கொண்டுவரப்பட்ட தபாற் பொதிகள், பருத்தித்துறையில் இருந்து யாழ். பிரதம தபாலக அதிகாரிகளால் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

உள்நாட்டு, வெளிநாட்டுத் தபால்கள் அடங்கிய மொத்தம் முப்பத்தொன்பது பொதிகள் இம்முறை வந்து சேர்ந்துள்ளதாகவும் —

அவை இன்று தொடக்கம் விநியோகிக்கப்படும் என்றும் — பிரதம தபால் அதிபர் திரு. ஆ. மயில்வாகனம் உதயனுக்குத் தெரிவித்தார். [அ-165]

## நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 20

மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலையின் கனிஷ்ட பிரிவு இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை பிற்பகல் 1-30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

சிறப்பு விருந்தினராகப் பங்குபற்றும் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி திரு. செந்தாளன் தேசியக் கொடியை ஏற்றி வைப்பார். பிரதம விருந்தினராக பொறியியலாளர் திரு. சி. பத்மநாதன் பங்குபற்றுவார். திருமதி புஷ்பம் பத்மநாதன் பரிசில்களை வழங்குவார்.

[உ]

★ ★ ★

யாழ். மாவட்ட மட்டத்திலான கணித, விஞ்ஞான வினாவிடைப் போட்டி நாளையும், நாளை மறுதினமும் யாழ். இந்துக் கல்லூரியில் காலை 9 மணி தொடக்கம் நடைபெறும்.

இந்தப் போட்டிக்கு கோட்ட மட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நாளை ஆண்டு 6, 7, 11 ஆகிய பிரிவுகளுக்கும், நாளை மறுதினம் ஆண்டு 8, 9, 10 ஆகிய பிரிவுகளுக்கும் போட்டி நடைபெறும்.

[உ-5]

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவினர் நடத்தும் இசையரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறுகிறது.

## பிரேரணை தோல்வி

எயர்பஸ் கொள்வனவு தொடர்பாக அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 66 பெரும்பான்மை வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்று தோற்கடிக்கப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 54 எம்.பிக்கள் வாக்களித்தனர். எதிராக 120 எம். பிக்கள் வாக்களித்தனர்.

அதேசமயம் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்க வகை செய்யும் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று 72 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 122 எம். பிக்கள்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பாலம் சேதம்

கிளிநொச்சி, மார்ச் 20

கிளிநொச்சி, கணேசபுரம் பகுதியை உருத்திரபுரம் வீதியுடன் இணைக்கும் பிரதான பாலத்துக்கு பதிலாக அமைக்கப்பட்ட தற்காலிக பாலம் சேதம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது பிரதான பாலம் உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்களம் இந்தத் [illegible] பாலத்தினை அமைக்[illegible].


[த-10]

# "பொன் அணிகள் போர்"

# 75 ஆவது வருடப் போட்டி

## இன்று சென். பற்றிக்ஸ் மைதானத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நடைபெறும் வருடாந்த ''பொன் அணிகள் போர்'' (Battle of the Golds) கிரிக்கெட் ஆட்டம் இன்றும் நாளையும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.




யாழ்ப்பாணக் கல்லூரி அணி

பொன் அணிகள் போரின் 75 ஆவது ஆண்டு — பவள விழா — ஆட்டம் இதுவாகும்.

இன்றைய ஆட்டம் நண்பகல் 2 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் நடை பெறும். நாளைய ஆட்டம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.30 மணி வரை நீடிக்கும்.

சென். பற்றிக்ஸ் அணிக்கு ஜே. ஜே. ஈ. ஏபர்ன் தலைமை வகிக்கிறார். பி. எரிக் நிர்மலன், என். அஜந்த் தேவராஜா, அன்ரனி மக்ஸி, ஆர். பிரசாத், என். ஆர். மகேந்திரராஜா, பி. பாலகுமார். எஸ். நிஸாந்தன், கே. பிரதீபன், ரி. தர்மேந்திரா, ஆர். டிலிப்குமார், என். சுதீஸ்குமார், கியூ. ஏ. எக்பேர்ட், ஜே. ஏ. கே. சதீஸ்குமார், ஏ. ஸி. லொயாலா, எஸ். பிரபாகர் ஆகியோர் அணியில் இடம் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு ரி. வீரசுதன் தலைமை வகிக்கின்றார். ஆர். யூ. மகேந்திரா, எஸ். ஜெய அன்ரன், ரி. ஜோ. அருள்செல்வம், எஸ். அஜித், எஸ். நிஹால் சுரேன்குமார், எஸ். ஜே. பீற்றர், எஸ். சஞ்சீயன், பி. சத்தியசீலன், கே. வரப்பிரதன், எஸ். ஜெயந்தன், எஸ். சிவதரன், எஸ். சிவகரன், ஆர். ராஜ்மோகன், கே. கோணேஸன், எஸ். பிரேம்குமார் ஆகியோர் அணியில் அங்கம் வகிக்கின்றனர்.



சென். பற்றிக்ஸ் அணி

இவ்வருட பொன் அணிகள் போருக்கு திரு. பி. முருகவேள், திரு. எஸ். சுசீந்திரலிங்கம் ஆகியோர் மத்தியஸ்தம் வகிப்பர்.

கடந்த 74 வருடப் போட்டிகளிலும் கிடைக்கப்பெற்ற முடிவுகளின்படி 24 ஆட்டங்களில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றியீட்டியிருக்கிறது. யாழ்ப்பாணக் கல்லூரி 15 ஆட்டங்களில் வென்றது. 18 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

# மலையகத்தில் மீண்டும் இனவாதம்; சவாலை சமாளிக்க தயாராகுங்கள்!

## தொண்டமான் அறைகூவல்

கொழும்பு, மார்ச் 20

மலையகத்தில் இனவாத சக்திகள் மீண்டும் தலையெடுக்க முயற்சித்து வருகின்றன. இச் சவாலை எதிர்நோக்கி முறியடிக்க நாம் தயாராக இருக்க வேண்டும்.

இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் நுவரெலியாவில் நடைபெற்ற இ. தொ. கா. வருடாந்த மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அப்போது அவர் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் [கண் கலங்கியவாறு] காணப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இனவாத [illegible] திரமூட்டும், நடவடிக்கைகளுக்கு இடமளிக்காது பொறுப்புணர்ச்சியுடன் மலையக இந்தியத் தமிழ்ச் சமூகம் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தேசிய ஐக்கியத்துக்கு விரோதமானவர்கள் என்றும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்றும் இலங்கை இந்தியத் தமிழர்களை குற்றஞ் சாட்டுவதில் இனவாத சக்திகள் தற்போது ஈடுபட்டு வருகின்றன —

அரசுக்கும்—இ. தொ. காங்கிரஸுக்கும் இடையில் உள்ள நல்லுறவை முறியடிப்பதற்காகவே சில தீவிர நோக்கம் கொண்டவர்கள் மலையகத்தில் 'புலி புலி' என்று பயமுறுத்துகிறார்கள் —

மலையகத்தில் ஏதாவது இரண்டொரு சம்பவங்கள் நடக்கலாம். அவற்றை வைத்துக் கொண்டு பூதகாரமாக்கி பிரச்சினையை உண்டாக்கினால் தாம் பதவிக்கு வரக் கூடும் என்று அந்தச் சக்திகள் நினைக்கலாம். ஆனால் அது நடக்காது —

நான் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பித்த யோசனைகளை முன்வைத்து சில தீவிரவாதிகள் இ. தொ. காவையும் என்னையும் பத்திரிகைகளில் தாக்கி எழுதுகிறார்கள். அதனால் இன ஐக்கியத்திற்காக,

[8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்ட

# தமிழக தீவிரவாதிகள் இரண்டு பேர் இந்தியப் படையினரிடம் ஒப்படைப்பு

சென்னை, மார்ச் 20

ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக வாலிபர்கள் இருவர் மேல் விசாரணைக்காக இந்தியப் படை அதிகாரிகளிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ் குடாப் பகுதியில்— நயினாதீவுக்கு அருகே உள்ள— தீவு ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் இந்த இருவரும் தீவிரவாதிகள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இருவரையும் இராமேஸ்வரத்தில் வைத்து ஸ்ரீலங்கா அதிகாரிகள் இந்தியக் கடற்படை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர் என்று சென்னையில் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் ஆறுமுகம் என்பவர் தலைமறைவாகி உள்ள குற்றவாளி என்று சென்னையில் நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டவர். மற்றவரின் பெயர் முரளி என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியக் கப்பலான 'எம். வி. ராமானுஜம்' மூலம் இருவரும் இராமேஸ்வரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களை தமிழ்நாடு 'கியூ' பொலீஸார் பின்னர் பொறுப்பேற்றனர்.

விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த இருவரைப் பிடித்து, இந்திய அதிகாரிகளிடம் இலங்கை அதிகாரிகள் முதல் தடவையாக ஒப்படைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும் என்று இந்திய வானொலி அறிவித்தது.

இவர்கள் இருவரும் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது ராஜீவ் காந்தி கொலை வழக்குக்கும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் ஏனைய வழக்குகளுக்கும் பெரிதும் உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மே மாதம் இடம்பெற்ற ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்தை அடுத்து— தமிழகத்தைச் சேர்ந்த— ஆறு பேர் கொண்ட தீவிரவாதக் குழு ஒன்று இலங்கை நோக்கி தப்பிச் சென்றது என்றும்—

அந்தக் குழுவைச் சேர்ந்த இருவரே ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு இப்போது இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரிவினைவாதக் குழுவினர் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் நெருக்கமாகப் பழகி வந்தவர்கள் என்றும்—

அந்தக் குழுவைச் சேர்ந்த இருவர் இந்திய அதிகாரிகளிடம் சிக்கியிருப்பதால் அக்குழுவின் தலைமறைவு நடவடிக்கை பற்றிய தகவல்கள் அதிகாரிகளுக்குத் தெரியவரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்திய வானொலி மேலும் அறிவித்தது.

## மீனவர்கள் திரும்பவில்லை

குருநகர், மார்ச் 20

கடந்த செவ்வாயன்று கடலுக்குச் சென்ற மூன்று குருநகர் மீனவர்களும் அவர்களது வள்ளமும் திரும்பி வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கபிரியேல் ரஞ்சன் [வயது 20], பூபாலசிங்கம் மனோான் [வயது 25], வின்ஸ்கோன் சந்திரன் [வயது 16] ஆகியோரே அந்த மூன்று பேரும் ஆவர்.

[ஓ-51]

## இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 20

''ரைனி ரொட்ஸ் கோர்னர்'' சிறுவர் பாடசாலை கலை நிகழ்ச்சிகள் இன்று வெள்ளி பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வர்த்தக மாணவர் மன்றத்தின் வணிக ஜோதி இதழின் 14 ஆவது வெளியீட்டு விழா இன்று முற்பகல் 11 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். [இ-5]

## உயர்தர..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு யாழ். கல்வித் திணைக்களத்துக்கு பரீட்சை ஆணையாளர் கடந்த திங்கட்கிழமை அவசரச் செய்தி ஒன்றை அனுப்பி இருந்ததும்— தெரிந்தவையே.

இந்தக் குழப்ப நிலையைத் தொடர்ந்து, பரீட்சை ஆணையாளருடன் பேச்சு நடத்துவதற்காக யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் [புதன்] இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டிருந்தார். (அ-எ-5)

## மலையகத்தில்..

[7ஆம் பக்கத் தொடர்சி]

நாட்டின் சமாதானத்துக்காக நாம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கைவிடப் போவதில்லை — என்றும் அவர் சொன்னார். [அ-எ]

## கொழும்பு வர்த்..

[ 2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட மேற்கு நாட்டுத் தூதரகம் அக்கொள்கலனுக்கு உரிமை கோர மறுத்து விட்டதைத் தொடர்ந்து, பொலீஸார் நடத்திய விசாரணையில் கொழும்பு வர்த்தகர் அகப்பட்டுக் கொண்டார்.

அபராதத் தொகையைச் செலுத்த அந்த வர்த்தகர் தவறியதைத் தொடர்ந்து, பொலீஸார் அவரை கொழும்புத் துறைமுக நீதிவான் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்தனர். பின்னர் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். [உ-எ]

## புலிகளின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஊடுருவல் செய்திருப்பதை பொலீஸும் இராணுவமும் உறுதி செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

என்றாலும், இத் தற்கொலைப் படையில் எத்தனை பேர் உள்ளனர் என்ற விவரம் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சேலம் மாவட்டம் - ஏற்காட்டில் உள்ள வயர்லஸ் றிப்பீற்றர் நிலையத்தில் உள்ள எமது தொலைத் தொடர்பு சாதனங்களில் ஒரு சக்தி வாய்ந்த அந்நிய வயர்லஸ் கருவி குறுக்கீடுகளை மேற்கொள்வது தெரியவந்திருக்கிறது என்றும் முதலமைச்சர் சொன்னார்.

இது எங்கே இருக்கிறது, எவ்வாறு இயக்கப்படுகிறது என்பது இன்னும் மர்மமாக இருக்கிறது என்று சொன்ன அவர், பொலீஸார் இது பற்றி விசாரணை நடத்தி வருவதாகவும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் தம்மைக் கொலை செய்யத் திட்டமிட்டுள்ளார்கள் என்று தமக்குக் கூறப்பட்டபோது தாம் அதுபற்றிக் கவலைப்படவில்லை என்றும் செல்வி ஜெயலலிதா சொன்னார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மத்திய அரசு தடை செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் தமது உரையில் இறுதியாகக் கேட்டுக்கொண்டார். [உ-எ]

## மணலாறு ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படுகிறது.

கொக்கிளாய் முகாமில் இருந்து சண்டை நடைபெறும் பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விமானக் குண்டு வீச்சு மற்றும் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களினால் பொது மக்களின் உடைமைகளுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தொடர்ந்து இடம்பெற்று வரும் சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கை ஆண்டாள் (யோகேஸ்வரி கந்தையா—வவுனியா) என்பவர் வீரமரணமடைந்தார் என்றும் அறிவிக்கப்பட்டது.

[ஓ-5-15]

## கொழும்பில்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காப்புப் படையினரும் உஷார்படுத்தப்பட்டிருப்பதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது.

அறிமுகம் இல்லாதவர்கள் நடமாட்டம், வாகனங்களின் நடமாட்டம், பொது இடங்கள், வீடுகளில் அனாதரவாகக் காணப்படும் பொதிகள் ஆகியன குறித்து மிக எச்சரிக்கையாக இருக்குமாறும்—

அவை குறித்துப் பொலீஸாருக்கோ அல்லது பாதுகாப்புப் படையினருக்கோ உடனடியாகத் தகவல் கொடுக்குமாறும்— பொதுமக்களை அரசாங்கம் கேட்டுள்ளது.

இதே வேளை பொலீஸ் நிலையங்கள், படையினர் அலுவலகங்கள், முகாம்களின் பாதுகாப்பு பெரிதும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது

விடுதலைப் புலிகள் உள்ளே நுழைந்திருப்பதாகக் கூறி மக்களைக் கிலியடையச் செய்வதும், படையினர் உஷார் அடைவதும் இப்போது கொழும்பில் அடிக்கடி நிகழ்வதாக—அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். [அ]

## முல்லைத்தீவு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பழம்பாசியைச் சேர்ந்த மாணிக்கவாசகர் சுபாஜினி [16 வயது] ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து வற்றாப்பளைப் பகுதியை நோக்கி ஷெல் வீச்சுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு 3 ஆம் கட்டைப் பகுதியிலும் விமானக் குண்டு வீச்சுகள் இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

[ஓ-15]

## கடற்றொழி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளர் கூட்டுறவுச் சங்கம், சாவற்கட்டு கடற்றொழிலாளர் சங்கம், நவாலி கடற்றொழிலாளர் சங்கம், மானிப்பாய் சூசையப்பர் கடற்றொழிலாளர் சங்கம், பண்டத்தரிப்பு கடற்றொழிலாளர் சங்கம், மாதகல் கடற்றொழிலாளர் சங்கம், மாரீசன்கூடல் கடற்றொழிலாளர் சங்கம் ஆகியன கலந்து கொண்டன.

பேரணியில் கலந்துகொண்டோர் உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் சமர்ப்பிக்கக் காத்திருந்த போது அங்கு சிறிது அமளி துமளி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[இ-15]

## பிரேரணை.,

[7 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாக்களித்தனர் எதிராக சுதந்திரக்கட்சி, ஐக்கிய சோஷலிச அணி மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றைச் சேர்ந்த 50 எம்.பிக்கள் வாக்களித்தனர்,


## தேவை

1. **Audit Trainers**
   க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியல், வர்த்தகம் ஆகியவற்றில் திறமைச் சித்தி பெற்றோர் விண்ணப்பிக்கலாம்.
2. கணக்கியல் கணக்காய்வுத் துறையில் அனுபவம் உடையோர் தேவை.
3. இந்நிறுவனத்திற்கு Peon தேவை.

**A. S. S. (J) Ltd.**
140, Palaly Road,
Thirunelvely. [20160]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி பூதப்பிள்ளை

திருமதி மகேஸ்வரி பூதப்பிள்ளை 19-3-92 அன்று காலமானார். இவர் மாதவளை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை பூதப்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி புவனேஸ்வரி சரவணபவன், பரமேஸ்வரி சிவநாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விக்கினராசா, யோகராணி, ஜெயராணி, குகதீசன் [சவூதி], சண்முகதாசன் [பிறிமா, திருமலை] ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசலிங்கம், பத்மமலர் [கனடா], கோப்பெருந்தேவி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று 20-3-92 பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக வவுணாவத்தை-தெல்லிப்பழை திரு. விமலராசாவின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல் :
சி. கணேசலிங்கம்
வவுணாவத்தை,
தெல்லிப்பழை. [20159]

### கார்த்திகேசு தம்பிராசா சிவலிங்கம்

வேலணை மேற்கு, தலைகாட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு தம்பிராசா சிவலிங்கம் 15-3-1992 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் தலைகாட்டி, வேலணை மேற்கு கார்த்திகேசு தம்பிராசா, திருமதி அன்னம்மா தம்பிராசாவின் அருமை மகன் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது கொழும்பு இல்லத்தில் 19-3-1992 வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திருமதி அன்னம்மா தம்பிராசா
37/7, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். (20149)

### அப்பையா மகாதேவன்

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும், நெட்டிலைப்பாய் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ்ப்பாணம் கச்சேரி முன்னாள் இலிகிதரும் விவாகப் பதிவாளருமான அப்பையா மகாதேவன் காலமானார்.

இவர் காலம்சென்ற அப்பையா — கௌரி அம்மா தம்பதிகளின் புதல்வனும், புஷ்பராணியின் அருமைக் கணவரும், யோகானந்தன் [லண்டன்], கௌசல்யா [இந்து மகளிர் கல்லூரி மாணவி], குகானந்தன் [கனடா], ஸ்ரீலவன் [யாழ். இந்துக் கல்லூரி மாணவன்]. தீபா [இந்து மகளிர் கல்லூரி மாணவி] ஆகியோரின் அருமைத் தந்தையும், காலம்சென்ற தெட்சனாமூர்த்தி, சிதம்பரநாதன், திருமதி சரோஜினிதேவி, கனகலிங்கம், தேவசகாயம் ஆகியோரின் சகோதரரும், ஞானப்பூங்கோதை தியாகராசா, ஸ்ரீறதன் [லண்டன்], சத்தியசோதி ஆகியோரின் மைத்துனரும், கெங்காதரனின் [லண்டன்], பெரியதகப்பனாரும், காலம்சென்ற இரத்தின மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 1 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
ஸ்ரீலவன் [மகன்]
நெட்டிலைப்பாய்,
கோண்டாவில். [20161]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org